**ஜனவரி – 18**

# தேசியச் செய்திகள்

## ELECRAMA 2020

- "ELECRAMA 2020" என்ற நிகழ்ச்சியானது நொய்டாவில் நடத்தப்பட்டது.
- இந்நிகழ்ச்சியானது இந்திய மின் தொழில் துறையின் புதுமைகளையும் சாதனைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.
- "ELECRAMA" தளமானது இந்திய மின் மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (IEEMA - Indian Electrical and Electronics Manufacturers' Association) ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இது மத்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகம், மத்திய மின்சாரத் துறை அமைச்சகம், மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சகம் போன்ற பிற அமைச்சகங்களினால் ஆதரிக்கப் படுகின்றது.

### *மின் தொழில் துறை பற்றி*

- இந்தியா மூன்றாவது மிகப்பெரிய மின்சார உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் நாடாக விளங்குகின்றது.
- நாட்டின் தேசிய மின் தொடரானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப் படி, 368.79 ஜிகா வாட் திறன் கொண்டதாக உள்ளது.
- நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின் ஆற்றலில் 41.16% மின் ஆற்றல் தொழில்துறை நோக்கங்களுக்காகவும் 24.76% மின் ஆற்றல் வீட்டு உபயோக நோக்கங்களுக்காகவும் 17.69% மின் ஆற்றல் விவசாய நோக்கங்களுக்காகவும் 8.24% மின் ஆற்றல் வணிக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப் படுகின்றது.
- மொத்தமுள்ள 368.79 ஜிகா வாட்டில், தனியார் துறையின் மின் உற்பத்தியானது 46% ஆக உள்ளது.

## தேசியப் புலனாய்வுச் சட்டம், 2008

- சத்தீஸ்கர் அரசானது 2008 ஆம் ஆண்டின் தேசிய புலனாய்வுச் சட்டத்திற்கு (National Investigation Act - NIA) எதிராக உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. இச்சட்டமானது இந்திய அரசியலமைப்பை மீறுவதாக அம்மாநிலம் கூறியுள்ளது.
- சமீபத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளில் அரசியலமைப்பின் 131வது பிரிவின் கீழ் ஒரு மத்திய அரசின் சட்டத்தை ஒரு மாநில அரசு எதிர்க்க முயல்வது இது இரண்டாவது நிகழ்வாகும்.
- சமீபத்தில் கேரள அரசு குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது.

### *NIA சட்டம் பற்றி*

- இந்தச் சட்டமானது இந்தியாவின் முதன்மையான பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் செயல்பாடுகளை நிர்வகிக்கின்றது.
- இச்சட்டமானது 26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து அப்போதைய மத்திய உள்துறை அமைச்சரான ப.சிதம்பரம் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது இந்தியாவின் எந்தவொருப் பகுதியிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை அறிந்து நடவடிக்கை எடுக்கவும் வழக்குப் பதிவு செய்யவும் மாநில அரசின் அனுமதியின்றி எந்தவொரு மாநிலத்திற்குள்ளும் நுழையவும் அம்மாநில மக்களை விசாரிக்கவும்

மற்றும் அவர்களைக் கைது செய்யவும் NIAவிற்கு அதிகாரங்களை வழங்குகின்றது.

- "காவல் துறையானது" இந்திய அரசியலமைப்பின் 7வது அட்டவணையில் மாநிலப் பட்டியலில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் NIA திருத்தச் சட்டமானது புலனாய்வு அமைப்பு விசாரித்து, வழக்குத் தொடரக்கூடிய குற்றங்களின் வகையை விரிவுபடுத்தியுள்ளது.
- தற்பொழுது இந்த அமைப்பானது ஆள் கடத்தல், கள்ள நோட்டுப் புழக்கம், தடை செய்யப்பட்ட ஆயுதங்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல், இணைய வழிப் பயங்கரவாதம் மற்றும் வெடிபொருட்கள் சட்டம் 1908ன் கீழ் உள்ள குற்றங்கள் ஆகியவை குறித்து விசாரிக்கும்.
- மேலும் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) திருத்தச் சட்டமானது (Unlawful Activities (Prevention) Amendment - UAPA) ஒரு மாநில காவல்துறைத் தலைவரின் முன் அனுமதியின்றி பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் சோதனை நடத்தவும் ஒரு NIA அதிகாரியை அனுமதிக்கின்றது.
- குற்றத்தை விசாரிக்கும் விசாரணை அதிகாரிக்கு NIAன் பொது இயக்குநரின் அனுமதி மட்டுமே தேவைப்படுகின்றது.

## பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் 2020

- ஒரு தொடரின் ஆறாவது பதிப்பாக 2020 ஆம் ஆண்டின் பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் என்ற அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் என்பது பெண்களின் பொருளாதார வாய்ப்புகளைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை குறித்த தனித்துவமான தரவைச் சேகரிக்கும் உலக வங்கிக் குழுவின் ஒரு திட்டமாகும்.
- இந்தக் குறியீடானது 190 பொருளாதார நாடுகளில் பெண்களின் பொருளாதார உள்ளடக்கலைப் பாதிக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்கின்றது.
- இது சட்டத்துடன் பெண்களின் தொடர்புகளைக் குறிக்கும் எட்டு குறிகாட்டிகளால் அமைக்கப் பட்டுள்ளது.
- போக்குவரத்து, பணியிடம், ஊதியம், திருமணம், பெற்றோர்நிலை, தொழில்முனைவு, சொத்துக்கள் மற்றும் ஓய்வூதியம் ஆகியவை இந்த எட்டு குறிகாட்டிகளாகும்.
- 'கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக்', 'ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா', & 'லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்' ஆகிய பிராந்தியங்களில் உள்ள எந்தவொரு பொருளாதாரமும் சிறந்த சீர்திருத்தத்தை மேற்கொண்ட நாடுகளின் வரிசையில் முன்னணியில் இல்லை.
- இந்தக் குறியீட்டில் பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்சு, ஐஸ்லாந்து, லாத்வியா, லக்சம்பர்க் மற்றும் சுவீடன் ஆகிய எட்டு பொருளாதார நாடுகள் மட்டுமே 100 மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.
- மேற்குறிப்பிட்ட இந்த நாடுகள் இந்தக் குறியீட்டில் உள்ள எட்டு குறிகாட்டிகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சட்ட நிலைப்பாட்டை உறுதி செய்துள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## ஜூஸ் ஜாக்கிங்

- பாரத ஸ்டேட் வங்கியானது கைபேசிகளை மின்னேற்றம் செய்யும் நிலையங்களில் மின்னேற்றம் செய்ய வேண்டாம் என்று வாடிக்கையாளர்களை எச்சரித்துள்ளது.
- தீம்பொருள்கள் வாடிக்கையாளர்களது கைபேசிகளை பாதிக்கக்கூடும் என்பதால் மின்னேற்ற நிலையங்களில் தங்களது கைபேசிகளை மின்னேற்றம் செய்வதற்கு முன் ஒரு முறைக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும் என்று அந்த வங்கி அறிவுறுத்தி உள்ளது. இந்தத் தீம்போருள்கள் வாடிக்கையாளர்களின் முக்கியமானத் தரவுகள் மற்றும் கடவுச்சொற்கள் ஆகிய அனைத்தையும் திருடிக் கொள்ளும்.

***ஜூஸ் ஜாக்கிங் என்றால் என்ன?***

- நுண்ணறிவுக் கணினி ஊடுருவிகள் மின்னேற்ற நிலையங்களுடன் இணைக்கக்கூடிய வகையில் பாதிப்பை ஏற்படுத்தாத மற்றும் இன்னும் அதிநவீன யூஎஸ்பி போர்ட் (அகிலத் தொடர் பட்டை) போன்ற சாதனத்தை உருவாக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
- வாடிக்கையாளர் தனது தொலைபேசியை மின்னேற்றும் நிலையத்தில் உள்ள மின்னேற்றியில் செருகியவுடன், இந்தச் சாதனமானது கைபேசிப் பாதுகாப்பை மீறி அதில் தீம்பொருளை புகுத்தும். இந்தத் தீம்பொருளானது வாடிக்கையாளரின் தொடர்பு விவரங்கள், மின்னஞ்சல்கள், செய்திகள், புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் முக்கியமான நிதியியல் விவரங்கள் உள்ளிட்ட கைபேசியின் முழு உள்ளடக்கங்களையும் திருடி தன்னிடம் சேகரித்து வைத்துக் கொள்ளும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பாரதி எழுத்து வடிவம்


- சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே பாரதி எழுத்து வடிவம் எனப் பெயரிடப்பட்ட ஒன்பது இந்திய மொழிகளுக்கான ஒரு ஒருங்கிணைந்த எழுத்து வடிவத்தை உருவாக்கி இருந்தனர்.
- தேவநாகரி, வங்காளி, குர்முகி, குஜராத்தி, ஒடியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் தமிழ் ஆகிய எழுத்து வடிவங்கள் இதில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.
- தற்பொழுது இந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு படி மேலே சென்று, பல மொழி ஒளியியல் உரு அங்கீகார (OCR - optical character recognition) திட்டத்தைப் பயன்படுத்திப் பாரதி எழுத்து வடிவத்தில் ஆவணங்களைப் படிப்பதற்கான ஒரு முறையை உருவாக்கி உள்ளனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தால் எரிமலை

- பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாவிலிருந்து 50 கி.மீ தூரத்தில் உள்ள லூசன் தீவில் தால் என்ற எரிமலை ஒன்று வெடித்துள்ளது.
- தால் என்பது ஒரு "சிக்கலான" எரிமலை என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- ஒரு கூட்டு எரிமலை என்றும் அழைக்கப்படும் இந்த சிக்கலான எரிமலையானது ஒரு

முக்கியமான துளை (vent) அல்லது கூம்பு இல்லாத பல வெடிப்பு புள்ளிகளைக் கொண்டது என்று வரையறுக்கப் படுகின்றது.




# மாநிலச் செய்திகள்

## அகில பாரதிய மராத்திய சாகித்ய சம்மேளனம்

- ❖ மராத்திய எழுத்தாளர்களால் பங்கேற்கப்படும் இலக்கிய விவாதங்களுக்கான ஒரு வருடாந்திர மாநாடு இதுவாகும்.
- ❖ சமீபத்தில் முடிவடைந்த இந்த மாநாட்டின் 93வது பதிப்பில், மராத்தி மொழியை 'செம்மொழியாக' அறிவிக்கக் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ❖ தற்பொழுது, ஆறு மொழிகள் 'செம்மொழி' அங்கீகாரத்தைக் கொண்டுள்ளன. அவையாவன: தமிழ் (2004 இல் அறிவிக்கப்பட்டது), சமஸ்கிருதம் (2005), கன்னடம் (2008), தெலுங்கு (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014) ஆகியவையாகும்.

### *வழிகாட்டுதல்கள்*


- ❖ 1500 - 2000 ஆண்டுகளில் அதன் பழமையான (முந்தைய) நூல்கள் / பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் உயர் தொன்மை.
- ❖ பிற்கால தலைமுறையைச் சேர்ந்த மக்களால் மதிப்புமிக்க பாரம்பரியமாகக் கருதப்படும் பண்டைய இலக்கியம் / நூல்களின் அமைப்பு.
- ❖ இலக்கிய மரபானது அசல் தன்மையுடையதாகவும் வேறு மொழி பேசும் சமூகத்திலிருந்து கடன் வாங்கப்படாமலும் இருக்க வேண்டும்.
- ❖ செம்மொழியும் இலக்கியமும் நவீனத்திலிருந்து வேறுபடுவதால், செம்மொழிக்கும் அதன் பிற்கால வடிவங்களுக்கும் அல்லது அதன் கிளை மொழிகளுக்கும் இடையே ஒரு இடைவெளி இருக்கக் கூடும்.

# முக்கிய தினங்கள்

## மத்திய தத்தெடுத்தல் வள ஆணையம் - ஜனவரி 15

- ❖ மத்திய தத்தெடுத்தல் வள ஆணையமானது (Central Adoption Resource Authority - CARA) தனது 5வது வருடாந்திர தினத்தைப் புது தில்லியில் கொண்டாடியது.

- CARA என்பது உள்நாட்டுக் குழந்தைகள் தத்தெடுத்தலை ஊக்குவித்து அதனை மேற்பார்வையிடும் இந்திய அரசின் ஒரு உச்ச அமைப்பாகும்.
- இது நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பை ஒழுங்குபடுத்துவதற்காக நியமிக்கப் பட்ட ஒரு மத்திய ஆணையமாகச் செயல்படுகின்றது.





- 1993 ஆம் ஆண்டின் நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்புகள் குறித்த தி ஹேக் ஒப்பந்தமானது இந்திய அரசால் 2003 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் விதிகளின் கீழ், 2016 ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று CARA ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அறிவிக்கப் பட்டது.
- இது மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## திருவள்ளுவர் தினம் - ஜனவரி 16

- அனைத்துத் தமிழர்களாலும் திருவள்ளுவருக்காக "திருவள்ளுவர் தினம்" என்று அழைக்கப்படும் ஒரு நாளைக் கொண்டாடுவதற்கான தீர்மானமானது 1935 ஆம் ஆண்டு ஜனவரி 17 அன்று காளி சிவகண்ணுசாமி பிள்ளை மற்றும் பத்மஸ்ரீ வி. சுப்பையா ஆகியோரால் நிறைவேற்றப்பட்டது.
- முதலாவது திருவள்ளுவர் தினமானது 1935 ஆம் ஆண்டு மே 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை அடிகள், டி.பி. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. வி. கல்யாணசுந்தரம் ஆகியோர் முன்னிலையில் கொண்டாடப் பட்டது.
- தற்போதையக் காலகட்டத்தில், இது பொதுவாக ஜனவரி 15 அல்லது 16 ஆம் தேதிகளில் தமிழகத்தில் அனுசரிக்கப் படுகின்றது. இது பொங்கல் தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக கொண்டாடப் படுகின்றது.
- திருவள்ளுவர் ஆண்டானது வள்ளுவர் ஆண்டு என்றும் அழைக்கப்படுகின்றது. இது தமிழ்நாட்டில் பயன்படுத்துவதற்காக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தமிழ் நாள்காட்டி முறையாகும்.

- பரவலாகப் பயன்படுத்தப்படும் கிரிகோரியன் நாள்காட்டியுடன் ஒப்பிடும் போது, திருவள்ளுவர் ஆண்டானது கூடுதலாக 31 ஆண்டுகளைக் கொண்டிருக்கும்.
- உதாரணமாக, கிரிகோரியன் நாள்காட்டியில் 2019 ஆம் ஆண்டானது திருவள்ளுவர் ஆண்டு முறையில் 2050 ஆக இருக்கும்.
- 1971 ஆம் ஆண்டில், திருவள்ளுவர் ஆண்டானது கருணாநிதியின் தலைமையிலான திமுக அரசாங்கத்தால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. இது 1972 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- 1981 ஆம் ஆண்டில் மதுரையில் நடத்தப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டில், அப்போதைய முதலமைச்சரான எம். ஜி. ராமச்சந்திரன் திருவள்ளுவர் ஆண்டை அனைத்து அரசாங்க ஆவணங்களிலும் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்துவதற்கு வேண்டி ஒரு முறையான உத்தரவைப் பிறப்பித்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★